"கர்த்தர் நகரைக் காக்காவிட்டால்
அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்". தாபிதம்: 1876

சத்தியவேத பாதுகாவலன்

தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

சத்தியவேத
பாதுகாவலன்
வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள்:
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத். | யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஆடிமீ 25-ந்திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 29-ம் இல.

# 2ஆம் வத்திக்கான் பொதுச் சங்கம்

## புரட்டாதி 14-ந்தேதி மீளவும் கூடுகின்றது

எதிர்வரும் புரட்டாசிமாதம் 14-ந்திகதி 2-ம் வத்திக்கான் சங்கத்தின் 3-வது வருடக் கூட்டத்தை ஆரம்பிக்கப் பரிசுத்த பாப்பரசர் முடிவுசெய்திருக்கின்ருர் என வத்திக்கான் காரியதரிசி கருதினுல் சிக்கொக்ஞானி அறிவித்திருக்கின்ருர். முடிவுதினம் குறிக்கப்படவில்லை.

## வத்திக்கான்—ஹங்கேரிய உடன்படிக்கையா?

பரிசுத்த ஸ்தானத்திற்கும், ஒரு கம்யூனிஸ்தநாடான ஹங்கேரிய அரசாங்கத்திற்குமிடையே நிகழ்ந்துவருகின்ற இராசிய உறவுகள்பற்றிய சம்பாஷணைகள் உத்தியோகபூர்வமான ஓர் உடன்படிக்கையில் முடிந்து நல்ல பலன் தரும்போல் காணப்படுகிறது. திருச்சபைப் பரிபாலனத்தையும், மேற்றிராணிமார்களின் பணிகளையும் ஒழுங்குபடுத்துவதாகிய இந்த உடன்படிக்கையானது வத்திக்கானுக்கும், ஒருகம்யூனிஸ்த அரசாங்கத்துக்குமிடையே முதலாவதாக நிகழ்வதொன்ருகுமென ஜேர்மனிய கத்தோலிக்க செய்திஸ்தாபனம் அறிவிக்கின்றது. ஆயினும் இந்தஉடன்படிக்கை கர்தினுல் மின்ட்சென்ரி ஆண்டகையின் நியதியிலே கைவைப்பதாயில்லையென்றும் அந்த ஸ்தாபனம் கூறுகின்றது.

நிற்க, ஹங்கேரிய புதியமேற்றிராணிமார்களின் நியமனம்பற்றிக் கலந்துபேசுவதற்காக வத்திக்கானின் விசேடதூதர்கள் விசேடதிருச்சபைக் கருமங்களைக் கவனிக்கின்ற வத்திக்கான் இராச்சிய உதவிக்காரியதரிசியாகிய மொன்சிஞ். அகஸ்ரினே கசாறெலிசுவாமிகள் தலைமையிலே அந்நாட்டின் தலைப்பட்டணமாகிய புடாபெஸ்ற்நகர் சென்றிருப்பதாக மற்ருேர் செய்திஸ்தாபனம் அறிவிக்கின்றது.

மொன்சிஞ். கசாறெலிசுவாமிகள் கர்திஞல்மின்ட்சென்ரி ஆண்டகையின்பிரச்சினை, மற்றும் ஹங்கேரிய திருச்சபைக்கருமங்கள் சம்பந்தமாய் கடந்த சிலமாதங்களிலே பலமுறை ஹங்கேரிக்குப் போயிருக்கின்ருர். ஹங்கேரிய அரசாங்கத்துக்கும், வத்திக்கானுக்குமிடையே எதிர்காலத்தில் நிகழவிருக்கும் உடன்படிக்கையின்கீழ் இன்னுமே தீர்மானிக்கப்படாத மேற்றிராணிமார்களின் நியமனங்கள்பற்றி ஹங்கேரிய திருச்சபைக் குருசிரேஷ்டர்களுடன் இவர் ஆலோசனை செய்வாரெனச் சொல்லப்படுகிறது.

இன்னும் மொன்சிஞ். கசாறெலிசுவாமிகளும், மற்றும் வத்திக்கான் விசேடதூதர்களும் புடாபெஸ்ற்நகரிலே தங்கியிருக்கும்போது ஹங்கேரிய அரசாங்கபிரதிநிதிகளுடன் கலந்துஆலோசிப்பார்கள். ஹங்கேரிக்கும், வத்திக்கானுக்குமிடையே ஒருபுதியஉடன்படிக்கை கைச்சாத்திடப்படுமென எதிர்பார்க்கப்படுவதாய் அதேசெய்திஸ்தாபனம் அறிவிக்கின்றது.

## பரிசுத்ததந்தைக்கு இருவார ஓய்வு

சென்றவருடம் முழுவதும் அதிகம் கடுமையாக வேலைசெய்து வந்ததால் பாப்பரசர் சற்றுக் களைப்புற்றிருந்ததை அவதானித்த சில கருதினுல்மார், பாப்பரசரது வைத்தியர்கள் மூலம் அவரை இருவார ஓய்வுபெற்றுக்கொள்ளச் செய்துவிட்டனர். ஆகவே, இம்மாதம் 7-ம் திகதி தொடக்கம், 21-ந் திகதிவரையும் குறிக்கப்பட்டிருந்த பேட்டிகள் பின்போடப்பட்டன. இதைக் கேள்விப்பட்ட பலர் பாப்பரசரின் சுகயீனம் கடுமையானதாக இருக்குமோவென வீண்பீதி கொண்டனர். இத்தகைய பயத்துக்கு யாது காரணமும் இல்லையென்று செய்திகள் கூறுகின்றன.

### கர்தினுல்மாரின் வேண்டுகோள்

சென்றமாதம் பாப்பரசரது ஒரு வருட ஆட்சி நிறைவு தினத்தன்று அவரைக் காணச் சென்றிருந்த கருதினுல் குழுவினர் தலைவர் ரிசெருன்ற் ஆண்டகையவர்கள்மூலம், பாப்பரசர் தமது சுகத்தைப் பொருட்படுத்தாது அதிக வேலை செய்துவருவது பற்றித் தங்கள் கவலையைத் தெரிவித்திருந்தனர். இரவில் பலமணித்தியாலங்கள் பாப்பரசர் வேலை செய்வது வழக்கம். மேலும், இந்நாட்களில் பிரயாணவசதிகள் இலேசாக இருப்பதால் பாப்பரசரைப் பேட்டி காண வருபவரின் தொகையும் பெரிதும் அதிகரித்துள்ளது. வத்திக்கான் சங்க இவ்வருட கூட்ட நாட்களில் பாப்பரசருக்கு வேலை அதிகரிக்குமென்பதை அறிந்திருக்கும் கருதினுல்மார் பாப்பரசர் அதன் முன் நல்ல ஓய்வுபெற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தனர்.

### கிழவர்மடத்தில் உணவு பரிமாறினர்

ஓய்வுபெறுகிறதற்கு முந்தியநாள் உரோமாபுரியிலுள்ள ஒரு கிழவர் மடத்துக்கு விஜயம் செய்திருந்த பாப்பரசர் அங்கு அவர்களுக்கு "நூடில்ஸ்" உணவு பரிமாறிமகிழ்ந்தார். ஆகவே, இவரது சுகத்தாழ்வு கடுமையானது என்று கொள்வதற்கு இடமில்லை.

## இரும்புத்திரை நாட்டின் முதல் மேற்றிராணியார்

இரும்புத்திரை நாடுகளில்ஒன்ருகிய லிதுவானியாவுக்கு புதிய ஒருமேற்றிராசன மேற்றிராணியாரை சின்னப்பபாப்பரசர் நியமனஞ்செய்திருக்கின்ருர். 1944-ம ஆண்டு இந்தநாட்டைச் சோவியத்றர்கள் திரும்பவும் ஆக்கிரமித்துக்கொண்டபின் இத்தகையஒரு நியமனம் இதுவாகும். 1955-ம்ஆண்டுமுதல் ரெலெசியாய் மேற்றிராசனத்தின் பதில்தலைவராய் இருந்து வந்த மாசெலிஸ் மேற்றிராணியார் மாசிமாதத்திலே மேற்றிராணியாராகத் தெரியப்பெற்ருர். ஆனுல், அவரின்நியமனம் அப்பொழுது பிரசித்தஞ்செய்யப்படவில்லை. "அக்ரா அப்போஸ்தலிக்கே சேடிஸ்"என்ற பரிசுத்த ஸ்தானத்தின் அதிகாரபூர்வமான வெளியீட்டில் மேற்றிராணிமார்களினது நியமனங்களின் ஒழுங்குமுறையான அட்டவணையிலே இது தற்சமையம் வெளியாயிருக்கிறது. சோவியத் லிதுவானியாவில் இன்னுமே எஞ்சியிருக்கின்ற மூன்று மேற்றிராணிமார்களில் ஒருவரே 69வயதுடைய மாசெலிஸ்மேற்றிராணியார். இவர்ஒருவர்மட்டுமே அங்கு தமதுகடமைகளை நிறைவேற்ற அனுமதிக்கப்பட்டிருக்கின்ருர். லிதுவானியா நாடு 28லட்சம்மக்களைக் கொண்டுள்ளது. இவர்களில் 80சதவிகிதமானேர் கத்தோலிக்கரே.

### கன்னியாஸ்திரிமாரின் நவமான திருத்தொண்டு

தென்னமெரிக்காவிலே பிறேசில் நாட்டில் குருவானவர்இல்லாத அதிகம்தூரமான ஓர்இடத்திலுள்ள் நிசியா புளோறெஸ்ராஎன்ற விசாரணைப்பங்கை நிர்வகித்து நடத்துவதற்கென்று சிலுவையில் அறையுண்ட யேசுவின் மிஷனரிகள் சபையைச்சேர்ந்த நான்கு கன்னியாஸ்திரிமார் அந்நாட்டிலுள்ளநற்றல்மேற்றிராசனத்தின்அப்போஸ்தலிக்கபரிபாலனரான மொன்சிஞ். ஈயூஜினியோ சவேஸ்சுவாமிகளால் அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றனர். இந்தக் கன்னியாஸ்திரிமார் அனுதினமும் கோவிலிலே செபவழிபாடுகள் நடத்தியும், ஞானுபதேசம் படிப்பித்தும், மரிக்கிறவர்களுக்காகச்செபஞ்சொல்லியும், அவசியமென்று காணும்போது ஞானஸ்நானம் அருளியும் வருகின்றனர்.

## கர்தினுல் நியூமனுக்கு முத். பேறுபெற்ற பட்டமா?

கருதினுல் நியூமன் இங்கிலாந்துதேசத்தில் 19-ம் நூற்ருண்டின் அதிசிறந்த அறிஞர்களில் ஒருவர். அவர் புறொட்டஸ்தாந்து மதத்திலிருந்து மனந்திரும்பி கத்தோலிக்க வேதத்திலே சேர்ந்து கருதினுல் பதவிக்கு உயர்த்தப்பட்டவர். அவர் எழுதிய நூல்கள் பல. அந்நூல்களில் அவர் அன்று கூறிய அபிப்பிராயங்கள் வத்திக்கான்சங்க அபிப்பிராயங்களுடன் ஒத்துப்போகின்றன. அவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அளிக்கும் திட்டம் திருச்சடங்குக் குழுவினரால் ஆராயப்பட்டு வருகின்றது.

## அதி வயோதிப மேற்றிராணியார் காலமானர்

நியூயோர்க் மாகாணத்தில் அல்பனி பிரதேச மேற்றிராணியாராக 35வருடகாலம் கடமையாற்றிய மகாவந். எட்மன்ட் கிபன்ஸ் ஆண்டகையவர்கள் தமது 95-ம் பராயத்தில் இருவாரங்களின்முன் காலமானர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆடிமாதம் — 1964.

| | | | |
|---|---|---|---|
| 26 | ஞா. | பெக். கோ. பின் 10-ம் ஞாயிறு | (ப) |
| 27 | தி. | காலதினம் | (ப) |
| 28 | செ. | அர்ச். நசாரியார் | (சி) |
| 29 | பு. | அர்ச். மார்த்தம்மாள் | (வெ) |
| 30 | வி. | காலதினம் | (ப) |
| 31 | வெ. | அர்ச். லோயலா இஞ்ஞாசியார் | (வெ) |
| | | ஆவணி மாதம் | |
| 1 | ச. | மரியாயின் சனி | [வெ) |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ந் திகதி


## தாழ்ச்சி வேண்டும்

“ஆண்டவரே நான் செபம் செய்ய இங்கே வந்திருக்கிறேன். ஆயக்காரர், அநியாயக்காரர், கெட்டவர்கள், பாவிகளிலும் பார்க்க யான் மாறுபட்டவன். அதற்காக உமக்கு நன்றி கூறுகின்றேன்.”

“எனது வருமானத்தில் பத்திலொன்றைக் காணிக்கையாகச் செலுத்துகின்றேன். வாரத்தில் இருதடவை உபவாசம் செய்கின்றேன். ஏழைகட்கு அடிக்கடி அன்னதானம் நடாத்துகிறேன்.”

இதுதான் ஒரு பரிசேயனின் செபம். செபம் செய்பவர்களைப் பற்றி யேசுநாதர் எடுத்துக்காட்டிய உவமை. அத்துடன் ஆயக்காரன் ஒருவனின் செபத்தையும் காட்டுகிருர்.

“ஆண்டவரே நான் பாவி. என்மேல் இரக்கமாயிரும்.” தன் சிரசைத் தாழ்த்தி, மார்பில் அறைந்து கொண்டு அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக ஆயக்காரன் கூறிய வார்த்தைகள் இவை.

எல்லாக் காலத்துக்கும் எல்லோருக்கும் தேவையான உண்மைகளே சுவிசேஷத்தில் தரப்பட்டுள்ளன. இன்னும் ஆலயத்துக்குச் செபம் செய்ய வருகிறவர்களிடம் ஆயக்காரரையும், பரிசேயரையும் காண்கிறோம்.

பரிசேயனின் கர்வம், பலரில் தொனிக்கிறது. பீடத்தில் நின்று செபம் செய்தான் அவன். ஆலயத்தில் சிறந்த இடவசதி வேண்டும் இன்றைய பரிசேயர்கட்கு.

தன்னைவிடச் சிறந்தவனில்லை என்பது பரிசேயனின் கொள்கை. அக்கொள்கையைப் பிரதிபலிக்க இன்றைய பரிசேயர்கள் பலர் முயலுகின்றனர்.

தங்கள் நாகரிகம், பணவசதி, கல்வியறிவு இவற்றைப் பறையடிப்பதற்குச் சிறந்த இடமாக ஆலயத்தைத் தெரிந்து கொள்பவர்கள் பலர்.

ஆலயம் ஓர் உடையலங்கார மேடை எனக் கருதுபவர்களும் அனந்தம் பேர்.

ஆலயம் இறைவனின் இல்லம். அங்கு நாம் செல்வது எதற்காக ?

எமக்குத் தேவன் செய்துவரும் நன்மைகட்கு நன்றி கூற, எமக்கு வேண்டிய தேவைகளைக் கேட்க, எம் பாவங்கட்கு மன்னிப்பை இரந்து மன்றாட.

என்னை நல்ல குருவே எனக் கூறுவதேன்? என்ற வார்த்தைகளால் தங்களைப் புனிதர்கள் எனப் பறைசாற்றுவோருக்குச் சாட்டையடி கொடுத்தார் கிறீஸ்து.

பாவிகளாகிய எங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வு எதற்காக ?

ஆலயம் செல்வோர் இவையனைத்தையும் கவனித்தல் வேண்டும். அங்கு சகோதரத்துவம், சமத்துவம் நிலவுதல் வேண்டும்.

பணிவும், தாழ்ச்சியும் தாண்டவமாடுதல் வேண்டும்.

ஆண்டவனின் சந்நிதானத்தில் நாம் அனைவரும் சமமானவர்கள்.

> சர்வலோகங்களையும் தாங்கும் சருவவல்லப மகிமையின் அரசராகிய அவர் மிகக்கேவலமான சிறுவையை ஏற்றுக்கொள்ளுகிறார். பிரமிக்கத்தகும் இந்தத் தாழ்ச்சியின் ஆழ்ந்த தன்மையை யாரே பூரணமாய் அறிவார்? இருந்தாலும் இந்த மகா தாழ்ச்சியின் மூலமாகத்தான் மகாமாட்சி தோன்றியது—எமது மீட்சியும், உயர்வும் தோன்றின.

# தோல்வியில் வெற்றி

உலகம் தான் எல்லாம். பணம்பண்டம், செல்வம் செல்வாக்கு, பட்டம் பதவி இவைதான் முக்கியம்; நாட்டியம்ஆடும் நாகரிகப் பெண்கள் தான் நகரமாந்தர்களின் ஆவல்; மல்யுத்தம் தான் மனிதனின் புகழ். குதிரைச் சவாரிதான் அவனின் வேட்கை. ஆம். இத்தகைய எண்ணங்கள்தான் தாண்டவமாடிக் கொண்டிருந்தன வாலிப இனிகோவின் மனதினில். முப்பது ஆண்டளவாக இத்தகைய ஆசைகளில் திளைத்து அதையே மேற்கொள்ளத் தன்னாலான முயற்சி செய்து வருகிறான் இனிகோ.

ஆனால், அவன் என்றும் நினையாத, கனவிலும் கருதாத ஒரு காட்சி, ஒரு நிகழ்ச்சி, அவன் கண்முன் நிகழ்கின்றது. ஏன் அவனுக்கே நடக்கின்றது. பம்பலூனா நகர்க்கோட்டையில் காலில் காயப்பட்டு உண்மைவீரனாய், எதிரிகளும் மெச்சத்தக்க வகையில், காட்சியளிக்கின்றான் இப்போர்வீரன். வைகாசி 20-ம்தேதி 1521-ல் ஒரு கட்டிலின்மேல் அவனைப் படுக்கவைக்கின்றனர் எதிரிகள். நல்லசமாரித்தனைப் போல அவர்கள் அவனின் காயத்திற்கு மருந்துகட்டி, அவனுக்கு இரசமும் கொடுக்கின்றனர்.

கட்டிலில் தன்னந்தனியாய் காலம் கழிக்கும் இனிகோவின் கதிதான் என்ன ? அவனின் ஆகாயக் கோட்டைகள் எல்லாம் ஒரு துப்பாக்கிக் குண்டினால் தகர்ந்துசரிந்தன.

ஆனால், எல்லாம் இவ்வளவுடன் முடிந்துவிடவில்லை. மனத்திடமுள்ள, மனத்துணிவுள்ள நம்போர் வீரன், வேறொரு பாதையைக் காண்கின்றான். இத்துன்ப துயரவேளையில் இப்பாதையில் ஏன் நானும் நடக்கக் கூடாது? என்ற ஒரு கேள்வி எழுகின்றது. புனிதர்கள் வரலாற்றை வாசித்த இனிகோவின் மனதில் இந்தத் தீர்மானத்தை அவர் நிறைவேற்றக் கடவுளின் அளவிலா அருளும், மாதாவின் அன்பும் அவருக்கு உதவி செய்கின்றன.

துன்பத்திலே கடவுளைக் கண்டடைகிறவாலிப இனிகோ, கடவுளை என்றும் பின்பற்ற அவர் காட்டும் வழிகளின்படி நடந்துசெல்ல ஆசிக்கின்றார். துன்பத்தில் கடவுளைக் கண்டவர், மாதாவின் தரிசனத்தை அடைந்தவர், இவ்வுலகில் இன்னும் பற்பலதுன்பங்களை அனுபவிக்கவேண்டும். ஆண்டவர் சவுலைக் குறித்து: “நமது நாமத்தினிமித்தம் அவன் எம்மாத்திரம் பாடுபடவேண்டுமென்று நாம் அவனுக்குக் காண்பிப்போம்” (அப். நட. 9: 16) என்று அனனியாசுக்குக் கூறியதை இனிகோவுக்கும் கூறமுடியும்.

எழுந்துநடக்க முடிந்ததும் இனிகோ ஊரைவிட்டுவிட்டு “மன்ரேசா”என்னும் குகைக்குச் செல்கின்றார். அங்கே தான் அவர் முழுமனமாற்றமடைகின்றார். செபத்தாலும், தபத்தாலும் அங்கு பசாசு அவரைச் சும்மாவிட்டு விடவில்லை. அவர் செய்கின்ற ஒறுத்தல், தவமுயற்சிகளைக் கண்ட சாத்தான் அவரைப் பார்த்து: “ஓமனிதனே! உனது பொன்னான வாழ்வை ஏன் நீ மண்ணாக்குகிறாய்? நாற்பது ஆண்டுகளாக உன்னால் இத்தகைய வாழ்வை வாழமுடியுமா? இப்பொழுதே இதை நினைத்துப்பார்! இவை எல்லாம்வீண்! பேரும்புகழும் உனக்காக காத்துக் கொண்டிருக்கின்றன. இப்பொழுதே உன்போக்கை மாற்று” என்று புத்திபுகட்ட முற்பட்டது. ஆனால், திடமுள்ள மனம்மாறிய இனிகோ இந்த எண்ணம் உதித்த உடனேயே அது பசாசினிடமிருந்து வருகிறதென்றெண்ணி அதை உடனே தள்ளிவிட்டார்.

பசாசு அவரை இவ்வளவுடன் விட்டுவிடவில்லை. அவர் செய்த பொதுப் பாவசங்கீர்த்தனத்தில் அவர் அதிக கனமான பாவங்களை மறைத்துவிட்டார் என்று கூறி அவர்மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. இனிகோவோவெனில் நான் படும்பாடுகளைத் தன் ஆத்துமகுருவிடம் கூறியும், மறுமுறை பொதுப் பாவசங்கீர்த்தனத்தைச் செய்தும் அவரிடமிருந்து இப்பசாசின் சோதனை மறைந்துவிடவில்லை. அவரின் ஆத்துமகுருவும்கூட அவருக்கு ஒரு மருந்தும் கொடுக்க முடியவில்லை. ஆனால், கடைசியில் வெற்றிபெறுகின்றார் இனிகோ கடவுளின் உதவியால்.

இன்னும் எவ்வளவோ துன்பங்களை அடைகின்றார். மன்ரேசாவில் தமது முதல் ஞானவொடுக்கத்தைச்செய்த, மனம்மாறிய இஞ்ஞாசியார் கடவுளைக் கண்டார். அவர் காட்டிய பாதையைப் பின்பற்றினார். துக்கத்தைக் கண்டு அவர் பின்வாங்கவில்லை; கஷ்டத்தைக்கண்டு அவர் மனம் சலிக்கவில்லை. துன்பமோ இன்பமோ, எளிமையோ, பணமோ, இவ்வுலகில் அதிகஆண்டுகள் வாழ்தலோ அல்லது இளமையிலேயே உயிரை இழத்தலோ இவைகளில் ஒன்றையும் நாம் ஆசியாது கடவுள் நமக்கு இவைகளில் எதைத் தருகிறாரோ அதை நாம் நல்மனதுடன் ஏற்க வேண்டுமென்று கூறுகின்றார் நம் யேசுவின் போர்வீரர்.

தமது 35-ம்வயதில் லத்தீன்மொழி பயில்கின்றார் இஞ்ஞாசியார். பார்சலோனா, அல்கலா, சலமங்கா, பரிஸ் என்ற இடங்களில் முறையே படித்துக் குருப்பட்டம் பெறுகின்றார். ஆனால், அவர் படிக்கும் பொழுதும், மக்களுக்குக் கடவுளைப்பற்றிப் பேச, தமது ஞானவொடுக்கமுறைகளை அவர்களுக்குக் கற்பிக்க, அவர் பாடுபட்டார். அவர் படிப்பை முடித்துவிடாததின் காரணத்தால் அவர் படிப்பிக்கும் புதுமுறைகளைக் கண்ட குருக்களும், மேற்றிராணிமார்களும் அவரைத் தம்மிடம் அழைத்தனர், கேள்விகள் கேட்டனர், அவரைச் சிறையிலிட்டனர், அவர் குருப்பட்டம் பெறும்வரை சாவான அற்ப பாவத்திற்குள்ள வித்தியாசத்தை அவர் போதிக்கக் கூடாதென்று கட்டளையிட்டனர். கடவுளையே இவர்களில் கண்ட இஞ்ஞாசியார் அவர்களின் கட்டளைக்கு அமைந்தார்.

அவர் பாரிசில் படிக்கும்பொழுதே பலமாணவர்கள் அவரின் புத்திமதியைக் கேட்டு, அவருடன் சேர்ந்தனர். ஞானவொடுக்கமும் செய்தனர். இவர்களில் ஒருவரே புனிதபிரான் சிஸ்கு சவேரியார். இவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஒரு சபையாகவந்து வேதத்தைப் போதிக்கவேண்டுமென்றும் ஆசித்தனர். அதன்படியே யேசு சபை என்ற சிறியசபை 1540-ல் ஏற்படுத்தப்பட்டது. சபையை ஏற்படுத்த அதிக கஷ்டங்கள் வந்தன. ஆனால், “நான் உங்களுடன் ரோம் நகரில் இருப்பேன்” என்று இஞ்ஞாசியார் யேசுவிடமிருந்து கேட்டவார்த்தைகள் வீணாகவில்லை.

கஷ்ட துன்பங்களின் மத்தியில் தேவனின் அதிமிக தோத்திரத்திற்காகப் பாடுபட்டுழைத்த இந்த இஞ்ஞாசியார் 1554-ம்ஆண்டு ஆடிமாதம் 31-ம்தேதி பரமபதம் அடைந்தார். புனிதஇஞ்ஞாசியாரே எங்கள் பாடுகளை வெற்றிகொள்ள எங்களுக்கு உதவி செய்தருளும்.

“பாக்கியம்”

## ஓர் இஸ்லாமிய குருவின் மகன் கத்தோலிக்க குருவானார்

ஐக்கிய அமெரிக்காவில் வாஷிங்ரன் நகரத்தில் அண்மையில் திரு. பீற்றர் நாமி அவர்கள் கத்தோலிக்க குருவாகப் பட்டம்பெற்றுக் கொண்டார். இவருடைய தகப்பனார்பெயர் ஹட்ஜி மகமது அலி- இவர் இஸ்லாம் மதகுரு-இக் குடும்பம் பிலிப்பைன் தேசத்தைச்சேர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் பொதுச்சங்கம் ஏன்?

**மாதாமாதங்களாக அரிய பாடுபட்டு, அகில உலகிலிருந்து 2500 மேற்றிராணிமார்களையும், திருச்சபையினின்று விலகிய ஒவ்வொரு பிரிவிலிருந்தும் நிருபர்களையும், தேசப்பிரதிநிதிகளையும் ஒன்றுசேர்த்துக் கூடிய வத்திக்கான் பொதுச்சங்கம் எதற்காக? என்ற கேள்விக்கு விடையைக் கேளுங்கள்.**

அன்று தொட்டு இன்றுவரை முன்னேற்றப்பாதையிலே தீவிரவிசையுடன் சென்றுகொண்டிருக்கும் உலகம் கடந்த நூற்றாண்டிலே மகத்தான சாதனைகள் பலவற்றை ஈட்டியுள்ளது. இயற்கையை அடிப்படுத்தி அதன் எசமானாக வாழும்படி இறைவனிட்ட கட்டளைக்கிணங்கி விஞ்ஞானம் வளர்ந்து, நிலையற்ற மனிதனின் நிறைந்த வாழ்க்கைக்கு எண்ணரிய உதவிகளைச் செய்துள்ளது. தான் ஆக்கும் உலகத்தை நினைத்தவுடனே அடியோடு அழித்துவிடும் சக்தியையும் கொண்ட இவ்விஞ்ஞானவளர்ச்சி சிந்திக்கும் மனிதனின் சிந்தனையைக் கிளப்பியது மட்டுமல்லாது, "நான்" என்ற மனப்பான்மைக்கும் அடிகோலிவிட்டது.

இன்றிருந்து நாளை மறையும் விஞ்ஞான உண்மைகள் சிலவற்றின் நிலையற்ற கோலத்தைக் கண்டதாலே, நிலைத்திருக்கும் உண்மை ஏதாகிலும் இவ்வுலகில் இருக்க முடியுமா என்று தத்தளிக்கும் மனிதன், "வெட்டொன்று துண்டிரண்டு" என்ற மனப்பான்மையைக் கொண்ட சட்டங்களுக்குத் தன்னை அடிப்படுத்தத் தயங்குகின்றான். பரந்த இவ்வுலகின் மத்தியிலே தனக்கு ஏற்படும் துன்பங்களை விலக்கி வைக்க யாராவது ஓடிவருவார்களா என்று எதிர்பார்க்கும் மனிதனின் உள்ளத்திற்குக்கிடைத்த பரிசுமாற்றம்.

கால ஓட்டத்தின் மத்தியிலே மனிதனின் வாழ்க்கையிலும், சிந்தனையிலும் மாற்றத்தைக் கொண்டுவந்த விடயங்கள் பல. கடந்த சில நூற்றாண்டுகளிலே நடந்தேறிய அத்தகைய சம்பவங்களிலே ஒரு முக்கிய இடம் பெறுகிறது கைத்தொழிற்புரட்சி. முதலாளியின்கீழ் அடிமைபோல ஊழியம் செய்துவந்த பாட்டாளிகள் பலமிக்க ஓர் சுதந்திர வர்க்கமாக மாறினார்கள். தமது உரிமைகளுக்காகப் போராடினார்கள். இன்றைய உலகிலே மிகப் பலம்பொருந்திய வர்க்கமாகத் திகழ்கின்றது நமது தொழிலாளர் சமுதாயம். இந்தக் கைத்தொழிற்புரட்சி, தொழிலாளியின் உரிமையை அவனுக்களித்தது. ஆனால், "பசி" என்னும் பிணியை அகற்றவில்லை. இந்த உலகத்திலே தற்பொழுது வசிக்கும் மக்களுள் மூன்றில் இரு பாகம் பசியால் வருந்தவில்லையா? இனிமேல் எப்பொழுதாவது ஒரு புரட்சி தோன்றுமானால் அது பசியால் வாடுவோரின் புரட்சிஎன்றே கூறிவிடலாம்.

இத்தகைய உலகத்தின் எண்ணற்கரிய கஷ்டங்களை ஆழஉணர்ந்த பரிசுத்த தந்தை அருளப்ப பாப்பரசர் சிந்திக்கலானார். இருட்டின் ஒளியாய் துலங்க வேண்டிய திருச்சபை இத்தகைய உலகத்திற்கு அளிக்கவிருக்கும் அரும்பெரும் திரவியமென்ன? அன்று யேசு கொண்டுவந்த சமாதானம் இன்று இந்த உலகத்திலே நிலைகொள்ளவேண்டுமானால், அந்தச் சமாதானத்தை எங்கும்பரப்ப வேண்டிய கிறிஸ்தவ உலகம் ஆற்றவேண்டிய சாதனைகள் எங்கே? அதற்கு மாறாக "கிறிஸ்து" என்ற பெயரிலே பெருமை தட்டிக்கொண்டு, சிறிய சில குறைகளைச் சிரமேற் கொண்டுகாலாதி காலமாகக் கிறிஸ்தவ உலகம் பல பெரும் பிரிவுகளாக ஏன் பிரிந்திருக்க வேண்டும்? "கிறிஸ்தவர்கள்" என்று கூறிக்கொண்டு இலட்சியமற்றவர்களாக, தமக்கு கிறிஸ்து தனது அன்பைப்பெருக்க இட்ட கட்டளையை மறந்து, நான் மட்டும் பாக்கியமடைந்தால் போதும் என்ற தன்னலக் குறிக்கோளுடன் கிறிஸ்தவ உலகம் ஏன் நிறைவின்றிக் குறைவாய், குறட்டையாய் குற்றுயிருடன் குருட்டாட்டத்தனமாக வாழவேண்டும்?........கிறிஸ்துவின் அன்பினால் தூண்டப்பட்டுத் தன்னையும் தன்னைச்சுற்றியுள்ளவர்களின் வாழ்வையும் வனப்புறச்செய்யக் கிறிஸ்தவனால் ஏன் முடியாது? என்றெல்லாம் உளம் துடிக்கச் சிந்தித்தார், அரியதந்தை அருளப்ப பாப்பரசர்.

தளம்பாது தேங்கிநின்று நாற்றமடிக்கும் தடாகமல்ல கிறிஸ்துவின் அன்புமதம். ஆனால், தீவிரவிசையுடன் பரந்து நன்மைத்தனம், சகோதர அன்பு என்னும் தனது நறுமணத்தை எங்கும் பரப்பித் தின்மையில் நன்மை காணும் ஓர் அபூர்வ சக்தி. எனவே, இதே சக்தியைக் கொண்டு, தற்கால முறைகளுக்குத் தகுந்தபடி, உலகிற்குப் புத்துயிரளிக்க முற்பட்டார். காலத்துக்கேற்ற கோமாளிக் கோலம் போடுவதற்கல்ல, ஆனால், உறுதிநெஞ்சத்துடன் உள்ளதை உள்ளபடி ஏற்றுக்கொண்டு பிழைபோனதைச் செப்பனிடுவதற்கு, சிறியதைக் கூட்டுவதற்கு, மொட்டுவைத்தவைகளை மலரச்செய்வதற்கு. இத்தகைய ஒரு பெரிய சாதனையை ஈட்டிவைக்க ஆண்டவனின் ஒலிபோல், திடீரெனத் தந்தை அருளப்பரின் உள்ளத்திலே உதித்தது ஓர் எண்ணம் பொதுச்சங்கம்.

—சங்கலன்

(அடுத்த இதழிலே: புதியதோர் சரித்திரம் தொடங்குகின்றது.)

---

● சென்ற 1963-ம் ஆண்டிலே விசுவாசப்பரப்புதற்சபைத் திருச்சங்கத்தால் உலகின்பல புதுவேதநாடுகளுக்கும் 80 இலட்சம்பவுணுக்குமேல் பகிர்ந்து வழங்கப்பட்டிருப்பதாக றோமை நகரிலுள்ள பாப்பரசாது மிஷன் உதவிச்சபை தெரிவித்திருக்கிறது. நிகழும் வருடத்திலே இந்தத்தொகை 87 இலட்சத்து 50 ஆயிரம்ரூபாவாக அதிகரிக்குமெனச் சபை மதிப்பிடுகின்றது.

● பரீஸ்மாநகரிலுள்ள மிகவும்அழகான சதுக்கங்களில்ஒன்றுக்கு அருளப்பபாப்பானவரின் நாமம் சூட்டப்படவிருப்பதாய் அந்நகரமேயரான எம். ஜீன் ஒபேக்ரின் தெரிவித்திருக்கின்றார். இந்தப்புதியசதுக்கமானது சீன்நதியின் புயங்கள்இரண்டாலும் வட்டமிடப்பட்டவாறாய்க் காட்சியளிக்கின்றது. அருளப்பபாப்பரசர் முன்பு பிரான்சிய அரசாங்கத்திடமாகப் பாப்பரசரின் ஸ்தானிகராய் இருந்தபோது பரீஸ் நகரமக்களிடையே மிகுந்தபிரஸ்தாபம் எய்தியிருந்தார்.

● ஹங்கேரியதேச மேற்றிராணிமார்கள்சங்கத்தின் தலைவரான ஹாம்லாஸ்மேற்றிராணியார் சமீபத்திலே சின்னப்ப பாப்பரசரின் பேட்டிபெறச் சென்று அவர்முன்னிலையில்போய் நின்றதும் முந்தியவழமைப்படி தம்முடைய சிரசில்அணிந்திருந்த சிறியவட்டச்சீராவைத் தலையிலிருந்துஎடுத்துக் கைகளில் வைப்பதைக்கண்ட பாப்பரசர்: "சீராவைத் தலையில்திரும்பப் போட்டுக்கொள்ளும்; ஏனெனில், நீரும் ஒரு மேற்றிராணியாரல்லவா" என்று கூறலாயினர்.

## போராட்டம்

மண்ணில் பிறந்த மனிதர்களின் — சொந்த
வாழ்க்கையிலே பெரும் போராட்டம்;
எண்ணத்தில் செயலில் போராட்டம் — இது
எப்போது மாறுமோ யாமறியோம்.

நாட்டுக்கும் நாட்டுக்கும் போராட்டம் — இங்கு
"நான்" என்னும் அகந்தையால் போராட்டம்;
வீட்டுக்குள் இருப்போருள் போராட்டம் — இது
விந்தையடா, ஏது ஈடேற்றம்?

கட்சிக்கும் கொள்கைக்கும் போராட்டம் — புகழ்
காண்பதுதானே இவர் நாட்டம்;
இச்சிக்கும் ஆசையால் போராட்டம் — பூவில்
எங்கெங்கு பார்த்தாலும் போராட்டம்.

இருளுக்கும் ஒளிக்கும் போராட்டம் — நீதி
இல்லாத ஆட்சியால் போராட்டம்;
உடலுக்கும் உணர்வுக்கும் போராட்டம் — இது
ஒவ்வொரு விதமான போராட்டம்.

அறிவுக்கும் ஆண்மைக்கும் போராட்டம் — இதால்
அல்லற்படுகிறார் மக்களெல்லாம்;
பெருமைக்கும் பேருக்கும் போராட்டம் — இது
பேதமை, வீண் பித்தலாட்டம்.

ஆசிரியர்: ச. அமிர்தநாதர்

# உருளும் உலகிலே

### பூட்டான்

இமாலய மலைப்பிரதேசத்திலுள்ள பூட்டான் அரசாங்கம் ஒரு தொழில் நுட்பக்கல்லூரியை ஆரம்பித்து நடாத்துமாறு கத்தோலிக்க திருச்சபையைக் கேட்டுள்ளது. பதினெண்ணாயிரம் சதுரமைல் விஸ்தீரணமுள்ள இத்தேசத்தில் 7 லட்சத்துக்கு மேல் மக்கள் உளர். இவர்களில் பெரும்பாலோர் புத்த அல்லது இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்.

### பிலிப்பைன்

பிலிப்பைன் திருச்சபையைச் சேர்ந்த மேற்றிராணிமாரனைவரும் சேர்ந்து அண்மையில் விடுத்துள்ள கூட்டுநிருபமொன்றில் 1965-ம் வருடத்தை விசேட நன்றியறிதல் தோத்திரவருடமாகப் பிரகடனம் செய்துள்ளனர். அத்தேசத்தில் கத்தோலிக்கம் பரவத்தொடங்கிய 400-ம் ஆண்டுவிழா அடுத்தவருடத்தில் கொண்டாடப்படுகின்றது.

### போர்த்துக்கால்

போர்த்துக்காலில் உள்ள செண் வின்செண் டீ போல் தருமசபையினரின் பிரதம தலைவர் தம் பந்தியைச்சேர்ந்தோர் தருமக்கிருத்தியங்களில் ஈடுபடும்போது கத்தோலிக்கரல்லாத நண்பர்களையும் அவ்வலுவலில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று விண்ணப்பித்துள்ளார்.

### அமெரிக்கா

குருக்களும் சந்நியாசிகளுமாக 251 அமெரிக்க துறவறத்தினர் கடந்த வருடத்தில் லத்தீன் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். எல்லாமாக 1546 அமெரிக்க துறவிகள் தற்போது லத்தீன் அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் கடமையாற்றி வருகின்றனர்.

### கொங்கோ

கத்தோலிக்க, புரொட்டஸ்தாந்த சுவிசேஷ வல்லுநர்களும் பேராசிரியர்களுமான சிலர் அண்மையில் கொங்கோ தேசத்தின் லூலுபாரோக் பகுதியில் ஒன்றுகூடிச் சுவிசேஷ நூலை லூபாமொழியில் இருசபையினர்க்கும் பொருத்தமாக மொழிபெயர்க்கும் பணியை ஆரம்பித்துள்ளனர். கொங்கோவின் தென்பகுதியில் லூபாமொழி பேசும் லூபாசாதியினர் 15,00,000 பேர் உளர்.

### இந்தியா

கோவாவைச்சேர்ந்த பஞ்ஜிம் பகுதியில் உள்ள மகாலயத்திலிருந்து விலையுயர்ந்த பொருள்கள் சிலவற்றைத் திருடிய 35 வயதினனான பத்திரிசியானேசூசா என்பவன் ஏழுவருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான். இம்மகாலயத்தில்தான் அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் புனிதஉடல் பாதுகாக்கப்படுகின்றது.

### லண்டன்

இங்கிலாந்திலும் வேல்சிலுமுள்ள மேற்றிராணிமார்கள் அனைவரும் சேர்ந்து லண்டன் கத்தோலிக்க வானொலிநிறுவனத்துக்கு 5000 பவுண்கள் அன்பளிப்புச் செய்துள்ளனர். இந்த நிறுவனம் லண்டனில் ஒரு கத்தோலிக்க வானொலி நிலையத்தை நிறுவிக் கத்தோலிக்க நிகழ்ச்சிகளை வானொலி மூலமும் தொலைக்காட்சி மூலமும் ஒலிபரப்பும்.

### அவுஸ்திரியா

கடந்த தபசுகாலத்தின்போது அவுஸ்திரியாவிலுள்ள 8 வயதுக்கும் 14 வயதுக்குமிடைப்பட்ட ஒன்பதாயிரம் சிறுவர்களும் சிறுமிகளுக்குமிடையே ஒரு புது இயக்கம் நடாத்தப்பட்டது. இந்த இயக்கத்தின்படி தபசுகால ஒறுத்தலாக இனிப்புப்பண்டங்கள் அருந்துதலும், சினிமாபொழுது போக்குகளில் பங்குபெறுதலும் தவிர்க்கப்பட்டு அவற்றுக்காகச் செலவிடப்படும் பணம் சேமிக்கப்பட்டது. இவ்விதம் சேகரிக்கப்பட்டபெருந்தொகைப்பணம் கொரியா தேசத்தின் அகதிக்குழந்தைகள் நிவாரண நிதிக்காக உபகரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனு

## அந்நிய தேசமல்ல

அண்மையில் இங்கிலாந்தைச்சேர்ந்த கத்தோலிக்க குரவர் ஒருவரின் சொற்பொழிவுக்குச் சில கத்தோலிக்க பத்திரிகைகள் முக்கியத்துவம் தந்து பிரசுரித்திருந்தன. இக்குரவர் இராணுவத்தில் கடமையாற்றியவர். அவர் கூறுகின்றார்: "கடந்தமுதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களின்போது ஏராளமான ஆங்கிலேயர்களும், அமரிக்கர்களும் தங்கள் தாய்நாட்டை விட்டுத் தூரதேசங்கட்குச் சென்று தொண்டாற்றினர். அந்நியநாட்டின் அனுபவம் அவர்கட்கு மாறுபட்டதாகவும் வெறுப்பானதாகவும் இருந்தது. ஆயின் அவர்களுள் கத்தோலிக்கர்களோ தாம் சென்றவிடமெல்லாம் கத்தோலிக்கர்களோடு நன்குபழகிச் சொந்த நாட்டில் வசிப்பதுபோன்ற அனுபவத்தையே அடைந்தனர். நாம் உலகின் எத்திசைக்குச் சென்றாலும் அங்கு கத்தோலிக்கர்கள் இருக்குமிடங்கட்குச் சென்றால் அங்கு நாம் எங்கள் உறவினர்களுடன் இருப்பதுபோன்றஉணர்ச்சியே உண்டாகும்."

## வகே தோட்டத்தில்

அண்மையில் வகே தோட்டத்துக்கு யான் சென்றிருந்தபோது சூழவர இருளடர்ந்த பயங்கர கானகத்தின் மத்தியிலே உயர்ந்துவளர்ந்திருந்த மலை உச்சியிலே சிலகத்தோலிக்க குடிஜனங்கள் மத்தியில்நின்றபோது இதே உணர்ச்சியே எனக்கும் ஏற்பட்டது. ஆம் எந்த மூலைமுடுக்கிலும், மலையுச்சியிலே அல்லது பயங்கரபாதாளத்திலே, சமுத்திரத்தின் நடுவிலுள்ள சிறு தீவுகளிலேயும் அக்காலத்தில் கத்தோலிக்க குருக்கள் துணிவுடன் சென்று உண்மையொளியை அங்குபரப்பியிருக்கின்றார்கள்.

## பயங்கர அனுபவம்

எங்கள் மோட்டார் வண்டி புவாக்பிட்டியாவில் கொழும்புப்பாதையிலிருந்து பிரிந்து கானகத்தினூடே எட்டுமைல் தூரம் செல்லும் இருளடர்ந்த சிறுபாதையில் தன்பிரயாணத்தைத் தொடங்கியது. சாரதி ஜெறூட் மிகுந்த கவனமாக வண்டியைச் செலுத்த ஆரம்பித்தார். கூடவந்த குரவரும் அடிக்கடி சாரதியை எச்சரிக்கைசெய்துகொண்டிருந்தார். அடிக்கடிபயங்கரமானபள்ளத்தாக்குகளை எங்கள் வண்டி தாண்டியது. அந்தப் பள்ளத்தாக்குகளின்மேல் போடப்பட்டுள்ள பாலங்களோ மிகப்பழையவை. ஒவ்வொரு பாலத்தின்மீதும் வண்டி போகும்போது உயிரைக் கையிலே பிடித்துக்கொள்ளவேண்டும். பாதையோ மிகக்குறுகியது. சிறிது கவனப்பிசகாக வண்டி செலுத்தப்பட்டாலும் வண்டியும் அதிலிருப்பவர்களும் பாதாளத்தைநோக்கி உருண்டுபிரண்டு சென்று சேர்வர். அவர்கட்குநேர்ந்த கதியை மற்றவர்கள் அறிந்துகொள்ள பலமணிநேரம் செல்லும். மலைகளைச் சுற்றிச்சுற்றி ஏறுவதும் இறங்குவதுமாக அந்த அங்கிளியா மோட்டார் சென்றது. ஒருபாலத்தைத் தாண்டியபோது குரவர் கூறினார்: "இதோ பாருங்கள், சிலதடவைஇங்கு நாங்கள் வரும்போது இப்பாலத்தின் மேலாக ஆறடி உயரத்தில்கூட தண்ணீர்பாயும். அப்போதெல்லாம் நாங்கள் எம்பிரயாணத்தை நிறுத்தித் திரும்பிவிடுவோம். அந்தத் தோட்டத்துச் சனங்களுக்கும் பூசை கிடையாது."

## சின்னமலரின் ஆலயத்தில்

நீண்ட பிரயாணத்தின் பின்னல் வகே தோட்ட ஆலயத்தின்முன் வந்து சேர்ந்தோம். இந்தத்தோட்டத்தில் சுமார் பன்னிரு கத்தோலிக்க குடும்பங்களே உண்டு. இவர்கள் றப்பர்த் தோட்டத்தில் பணியாற்றுகின்றார்கள் ஆலயத்தின் பாதுகாவலி சின்னமலர் அம்மையார். ஒருசிறு கட்டிடம்தான். ஆலயமுகப்பிலே மோட்சத்திலிருந்து ரோஜாமலர்மாரி பொழியும் அப்புனிதையின் சிறுசொரூபம். மிகத்தூரமானதும் பிரயாணக் கஷ்டம் நிரம்பியதுமான வகே தோட்டத்துக்கு அடிக்கடி குருக்கள் வர இயலாது. மாதத்துக்கு ஒருதடவை கிழமைநாட்களில் மாலைவேளையில் குரவர் வந்துசேருவார். பங்கு அலுவல்கள், விசாரணைகள், ஞானோபதேச வகுப்பு, பாவசங்கீர்த்தனம், பாட்டுப்பழக்குதல்எல்லாம் நடந்து இறுதியாகத் திவ்வியபூசை நிறைவேற்றப்படும். மாதத்தில் கிடைக்கும் இந்த ஒரு பூசையில்தவிர யாராவது அவஸ்தையாயிருக்கும்போதும் குருவானவர் அத்தோட்டத்துக்கு வருகை தருவார்.

## திவ்விய பூசையில்

அன்று காலையில் அடர்த்தியான மழை. ஆகவே காலையில் தொழிலாளர்க்கு வேலையில்லை. பகல் 11 மணியளவில் மழைநின்றுவிட்டது. எனவே ஒரு மணியளவில் சங்கு ஊதப்பட்டது. அதன்கருத்து மாலையில் வேலை உண்டு என்பது. தொழிலாளர்கள்மாலை வேலைக்குச் சென்றிருந்தார்கள். வேலை முடிந்து வரும்வரை குருவானவரும் காத்திருக்க வேண்டியதாயிற்று. ஆறு மணிக்குப்பின்னரே குரவர் தம் கடமைகளை ஆரம்பித்தார். திவ்விய பூசைக்கு என்னுடன் 4 ஆண்கள், 3 பையன்கள், 10 பெண்கள் ஆகமொத்தம் 17 பேரே சமுகம் கொடுத்தனர். ஆயினும், எல்லோரும் சிறு செபப்புத்தங்களைக் கையிலே தாங்கிப் பக்தியருட்சியுடன் செபித்தமை என்மனதைத் தொட்டது.

## லபுகாம பகுதியால்

கொழும்புநகரம் முழுவதற்கும் தண்ணீர் அளிக்கும் லபுகாம வாவியைப் பற்றி நேயர்கள் அறிந்திருக்கக்கூடும். கொழும்புநகரிலிருந்து சுமார் 25மைல் தொலைவில் உள்ள இந்த நகரமே வகே தோட்டத்துக்குக் கிட்டிய நகரம். அதாவது, சிலமைல்கள் நடந்துசென்றே இத்தோட்டத்தினர் லபுகாமாவை அடைவர். நன்றாக இருட்டிவிட்டதால் நாம் முந்திய பாதையை விடுத்து வேறுபாதையின்மூலம் லபுகாமா சென்று அங்கிருந்து வீடுநோக்கும் பிரயாணத்தை ஆரம்பித்தோம். மாதத்தில் ஒருதடவை வகே தோட்டத்திலுள்ள சொற்ப கத்தோலிக்கர் தம் சமயானுசாரங்களை அனுசரிப்பதற்கு ஒரு குரவரும் அவரது மோட்டாரும் சுமார் 6 மணித்தியாலங்கள் எவ்வளவோ தொல்லைகளைத் தாங்கவேண்டியுள்ளதென்பதைச் சிந்திக்கும்போது நம் கத்தோலிக்கம் எவ்வளவோ கஷ்டங்கள் மத்தியில் உருவாக்கப்படுகின்றதென்பது புலனாகின்றது.

## உங்களுக்குத் தெரியுமா?

✳ கடந்த வருடம் ஜப்பான் தேசத்தில் அதிகபிரதிகள் விற்பனையான நூல் என்றபெருமை பைபிள் எனப்படும் சுவிசேஷத்துக்குக் கிடைத்துளது. அந்த நாட்டில் கடந்தவருடத்தில்மட்டும் 18,86,990பிரதிகள்விலைப்பட்டுள்ளனவாம்

✳ மால்டாவில் "எலும்புகளின் சிற்றாலயம்" என அழைக்கப்படும் சிறு கோவில் ஒன்றுண்டு. 1565-ல் துருக்கியின்மீது நடாத்தப்பட்ட சிலுவைப் படையெழுச்சிக்கு உதவியோரின் எலும்புகளனைத்தும் இச் சிற்றாலயச் சுவருடன் சேர்த்துக்கட்டப்பட்டுள்ளனவாம்.

✳ ஆதித்திருச்சபைக் காலத்தில் தபசு அனுஷ்டிப்புக்காக மிகக்கடுமையான விதிகள் அமுலில் இருந்தன. அவற்றுளொன்று பெரிய வெள்ளி காலைதொடக்கம் உயிர்த்த ஞாயிறு வரைஉண்ணாவிரதம்அனுஷ்டிப்பதாம்.

## ஈடேது ...... இணையேது?

புத்தளமூர் — ஏ. இ. ராஜக்கோன்

அழகுறு அணிகலன்கள் ஆயிரம் கரத்திலேந்தி
அன்பர்கள் புகழ்ந்திடவே அள்ளியே தந்திடினும்
பழமுடன் பாலும்சேர்த்தே பசித்தவர் பருகிடவே
பக்குவமாய்த் தருவதற்கு ஈடேது ...... இணையேது?

2

பற்பல கலைகளிலும் பாண்டித்யம் பெற்றமாந்தர்
பாரினில் மூலையெலாம் பரவியே வாழ்ந்திடினும்
கற்றது சிறிதானாலும் காசினியில் சிறுவருக்குக்
கசடறத் தருவதற்கு ஈடேது ...... இணையேது?

3

வற்றாத பொய்கையதும் வாடாத ரோஜாவுமே
வாரியே நீருடனே வாசனை வழங்கிடினும்
நற்றேனும் பாலுமே கலந்த தமிழணங்கின்
நலமான சுவையதற்கு ஈடேது ...... இணையேது?

4

நாளும் பொழுதும் ஆலயம் சென்றங்கே
நானிலத்தோர் மதித்திடவே நல்லவனாய் நடித்திடினும்
பாழும் போட்டி பொறாமையுடன் பூசலும்போக்கிப்
பண்புடன் வாழுதற்கு ஈடேது...... இணையேது?

5

புத்தம்புது மலரெடுத்துப் பூங்கரத்தால் தொடுத்துப்
பூமாலை சூடியே பூவுலகோர் புழ்ந்திடினும்
பக்தியிலே திளைத்து பாசத்தைக் குழைத்துப்
பாமாலை சாடியே பரமனைப் பணிதற்கு
ஈடேது ...... இணையேது?

ஊர்காவற்றுறையில்

## பாப்பு தினவிழா

பரிசுத்த பிதா பாப்பரனவர் தினம் கடந்த ஞாயிறு 12-ந்திகதி ஊர்காவற்றுறையில் கொண்டாடப்பட்டபொழுது பக்திச்சிறப்பான ஊர்வலம் ஒன்று புனித தேவதாயார் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகியது.

மாலை நான்கு மணியளவில் புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்கள், புனித தேவதாயார் பெண்பாடசாலை மாணவிகள் மற்றும் ஊர்காவற்றுறை மீசாமைச் சேர்ந்த மக்கள் ஆகியோர் புனிததேவதாயார் ஆலயமுன்றிலில் குழுமினர். பாடசாலை மாணவ, மாணவிகள் வெண்பொன் நிறக்கொடிகளைக் கைகளில் ஏந்திநிற்க, ஊர்வலம் பிரதானவீதி வழியாகச் சென்றது.

வீதிகள் தோறும் பாப்பானவரது கீதத்தை இசைத்தவண்ணம் சென்ற மக்களது ஊர்வலம் புனிதசந்தியோகுமையோர் ஆலயத்தை அடைந்ததும், அங்கு விசேஷமாக அமைக்கப்பட்டிருந்த திறந்தவெளி அரங்கின்முன் கூடி நின்றனர்.

கூடியிருந்த மக்களின் பலத்த கரகோஷத்தினிடையே பங்குக்குருவானவர் பாப்பரசரின் வெண்பொன் நிறக்கொடியையேற்றி வைத்தார்.

அதைத் தொடர்ந்து உதவிக் கட்டளைக் குருவானவர் புதியபாப்பு வைப்பற்றிச் சில ஆர்ப்பரிப்புகள்கூற, கூடியிருந்த மக்கள் "எங்கள் பாப்பு பல்லாண்டு வாழ்க" என்று ஒலியெழுப்பினர்.

அடுத்து, பரிசுத்த பாப்புவையும் அவரது நடவடிக்கைகளையும்பற்றிய ஞானோபதேசக் கேள்விப்போட்டி நடைபெற்றது.

அதன் பின்னர் புனிதஅந்தோனியார் கல்லூரி மாணவர் செல்வன் வஸ்தியாம்பிள்ளை, புனிததேவதாயார் பெண்பாடசாலை மாணவி செல்வி கமலாதேவி யோண்பிள்ளை ஆகியோர் தற்போதைய பாப்புவைப்பற்றிச் சொற்பெருக்காற்றினர். பங்குக்குருவானவர் கூடியிருந்தவர்களுடன் பரிசுத்த தந்தைக்காகச் செபித்தார். பின்னர் புனிதஅந்தோனியார்கல்லூரி மாணவரான செல்வன் ஏ. எவ். எஸ். சந்தியாப்பிள்ளை பாப்பானவர் இல்லறக் கிறிஸ்தவர்கட்கு விடுத்தசெய்தியைக் கூறினார்.

அடுத்து, "மனந்திரும்பியமன்னன்" என்ற ஒருசிறிய நாடகம் புனிதஅந்தோனியார் கல்லூரி மாணவர்களால் நடிக்கப்பெற்றது.

அடுத்து, ஞானோபதேசப்போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டன. கூடியிருந்தமக்கள் பாப்பானவர் கீதத்தை இசைத்ததுடன் விழா முடிவுற்றது.

மன்னார், வட்டாரப் பாடசாலைகளின்

## விளையாட்டுப் போட்டி

மன்னார், மாவட்டப் பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் சென்ற 9-ந்திகதி வியாழக்கிழமை மன்னார், புனிதசவேரியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வட்டார வித்தியாதரிசகர் திரு. சிவபாதம் தலைமையில் நடைபெற்றது. இதில் இருபத்தைந்து பாடசாலைகள் வரையில் கலந்துகொண்டமை பாராட்டற்பாலதாகும். கூடுதலானபுள்ளிகளை (92) பெற்றுக்கொண்ட பேசாலை, கத்தோலிக்க ஆண்பாடசாலை அநேக நற்சாட்சிப் பத்திரங்களையும் அதற்குரிய வெள்ளிக்கிண்ணங்களையும் பெற்றுக்கொண்டது. இரண்டாவது இடத்தை 63 புள்ளிகளுடன் அடம்பன், கத்தோலிக்க பாடசாலை பெற்றுக்கொண்டது. மூன்றாம் இடத்தை பேசாலை, பெண்கத்தோலிக்க பாடசாலை எடுத்துக்கொண்டது. பரிசுகளை புனிதசவேரியார் கல்லூரித் தலைவர் சங். ஹில்லறி யோசவ் சகோதரர் வழங்கினர்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான்பலவருடங்களாகத் தீராதநோயினால் பீடிக்கப்பட்டு வருந்தினேன். இந்த நிலையில் பரிசுத்த சகாயமாதாவை வேண்டி ஒன்பதுவார நவநாள் செய்யத் தொடங்கினேன். தீராதவியாதி முற்றும் குணமானது. பிரசுரிக்கத் தாமதமானதற்கு மன்னிப்புக்கோரி மேலும் எங்கள் குடும்பங்களுக்குத் தேவாசீர் கிடைக்கும்படியாக மன்றாடுகின்றேன்.

மாதாவின் அடியாள்.

மஸ்கெலியா.

* * *

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கோடி அற்புதரான அர்ச் அந்தோனியார் மூலமாகவும், கைவிடப்பட்டோரின் பரிபாலகரான அர்ச். யூதா ததேயுவின் மூலமாகவும் கேட்டமன்றாட்டு அனுகூலமானதால் நேர்த்தியைப் பூர்த்திசெய்யும்பொருட்டு இதைப் பிரசுரிக்கின்றேன்

ஒருபக்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே! வணக்கம்பல!

ஆடிமாதம் 26-ந்திகதி அண்மிவருகிறது. ஜெகமீட்பரின் அன்னையின் அன்னையாக விளங்கிய அர்ச். அன்னம்மாளின் திருநாள் நம்மை எதிர்நோக்குகிறது. இந்தமாதரசி மகளிர்க்கு ஓர் அரிய பாதுகாவலாளி. வாழ்க்கைப் படகைத் துன்பஅலைகளினூடே ஓட்டிச்செல்வோர்க்கு ஒளிகாட்டும் ஒரு கலங்கரை விளக்கம். குடும்பவாழ்க்கையில் சிறந்த மனையாளாக விளங்கினாள். பிள்ளைப்பேறில்லாமல் அதிககாலம் ''மலடி''என்று மற்றையோரால் இகழப்படும் நிந்தைகளைத் தாங்கினாள். அவ்வரம் கிடைத்தபோதோ ஆண்டவரை ஸ்துதித்து அக் குழந்தையை நல்வழிநடாத்தினாள். மூன்றும் பராயத்திலே கர்த்தர்கொடுத்த அரியகொடையைக் கர்த்தருக்கே அர்ப்பணித்துவிட்டாள். தனது மிகுதிவாழ்க்கையையும் இறைவனுக்குகந்தவிதத்தில் சீவித்துப் பரகதிசேர்ந்தாள். நம்மவர்க்கெல்லாம் அன்னையாகவிளங்கும் இந்த அர்ச்சியசிட்டவளின் பாதுகாவலை நாம் நாடுவோம். நம் ஆன்ம, சரீரதேவைகளை அவளிடம் கேட்டுஅடைவோம். அவள் முன்மாதிரிகையைப் பின்பற்றுவோம்.

சோதரி ரோஜா.

# உதிர்ந்த இதழ்கள்

## ஏழையென்றாலும் ராஜகுமாரன்:

"பணம் பந்தியிலே, குணம் குப்பையிலே" என்பதே இன்றைய உலகின் நாகரிகப் போக்கு. அதிலும் இன்றைய நவநாகரிக யுவதிகளும், அவர்கள் பெற்றோரும் நாடுவது உத்தியோகமும், பணமும்படைத்த வாலிபர்களையே. குணத்தைப்பற்றி ஆராய்ந்து, ஒருவரனைத் தெரிந்தெடுப்பது என்பது இன்றைய யுகத்தில் அறியாததொன்று. ஆயின், வாழ்க்கைப்படகு சிறிதுதூரம் ஓடியபின் தான் குணத்தின்அருமை தெரியவரும். சிலபெற்றோர் பணத்தையே பெரிதாகக்கருதி ''குரங்கின் கைப் பூமாலையாகத் தம்பெண் சிறாரை ஒழுக்கமற்ற வாலிபர்கையில் ஒப்படைக்கவும் தயங்குவதில்லை. எனது சிநேகிதி ஒருத்தி ஓர் ஆடவனை மணந்துகொள்ள விரும்பினாள். அந்தவாலிபனின் குணம் நன்று. ஆனால்,ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். உத்தியோகமும் அவ்வளவு உயர்ந்ததல்ல. என் சிநேகிதியின் தந்தையோ கோடீஸ்வரர். ஆகவே, அவர்தமது அந்தஸ்திற்கேற்ற ஒருவரனை நிச்சயம் செய்துகொண்டார். ஆனால், சிநேகிதியோ தன்மனதை மாற்றவிரும்பவில்லை. தந்தையார் என்னிடம் அவள்மனதைத் திருப்பமுயலும்படி கேட்டுக்கொண்டதையிட்டு அவளுடன் இவ்விஷயமாகச் சம்பாஷித்தேன். தந்தையாரதுமனதை நோகப்பண்ணக்கூடாது எனவும், செல்வத்தில் வளர்ந்தவளாதலால் பின்னர் கஷ்டமானவாழ்வு அவள் மனதையே மாற்றிவிடக் கூடுமெனவும் பொதுவாகவே கூறினேன். அதற்கு அவள் கூறியபதில் இதோ:

''பணம் படைத்தவர்களிடம் பண்பு இருப்பதில்லை. பணத்துடன் பணம் சேரவேண்டும் என்பதே அவர்களதும், என் தந்தையரதும் அபிப்பிராயம். ஏழையென்றாலும் நாம்விரும்புபவர் குணத்தில் ராஜன். அவர் ஏழை. ஆனால் பண்புள்ளவர். அவரிடம் பணம்இல்லை. ஆனால். குணம்உண்டு. குடிசையில் வாழ்ந்தாலும் நற்குணமுடையவருடன் வாழ்வது இனிமையுடையது" என்றாள். இவள்கூற்று வாழ்க்கையில் எவ்வளவோ உண்மைகளைப் படிப்பிக்கிறதல்லவா?

## கொல்லாமல் கொல்லும் நாக்கு!

அன்றொருநாள் விடுதியொன்றில் யான் சிறிதுவேளை கண்ணயர்ந்துகொண்டிருந்தேன். சற்றுநேரத்தில் விழித்துக் கொண்டபோது நான்கு பெண்மணிகள் விருந்தையில் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தது என்காதில் விழுந்தது. அவர்களது உரையாடல் தெருவினால் சென்றுகொண்டிருந்த ஒரு பெண்மணியைப்பற்றிக் குறைகூறுவதாக அமைந்திருந்தது. சற்றுவேளைசெல்ல அவர்களுள் ஒருத்தி விடுதித்தலைவியைக் காணும்படி சென்றுவிட்டாள். இருந்தாற்போல் அங்கே உட்கார்ந்திருந்த மற்றமூவரும் எழுந்துசென்றவளது குடும்பநிலைமை, அவளது வறுமை நிலையைப்பற்றி அலசத் தொடங்கினர்: இன்னும் சில நிமிடங்களுள் மற்றொருத்தியிடம் யாரோவரவே அவள் அவர்களுடன் சம்பாஷிக்கப் போய்விட்டாள். எஞ்சிய இருவரதும் உரையாடல் தற்போது இரண்டாவதாக எழுந்துபோனவளைப்பற்றித் திரும்பியது. அவளது ஆடம்பரமான உடை, அலட்சியப்போக்கு இவற்றைப்பற்றிக் குறைகூறத் தொடங்கினர். மேலும் சிறிதுநேரம் செல்லவே மூன்றாவது பெண்மணியும் எழுந்துபோகவே நான்காம்ஆள் தனித்துப்போனாள். குறைகதைத்துப் பழகிப்போன வாயல்லவா? தற்போது எனக்கருகில் வந்து முந்திய மூவரைப்பற்றியும் ஆவலாதி பேசத்தொடங்கினாள். இதுதான் இன்றைய பெண்மணிகளின் பொழுதுபோக்கு. ஆனால், விளைவிக்கப்படும் தீமையோ அனந்தம்! அனந்தம்! இவ்விடத்தில் அர்ச். பிலிப்புநேரியாரிடம் பாவசங்கீர்த்தனத்திற்கு வந்த ஒருபெண்மணியின் கதையைக்கூற விரும்புகிறேன். ஆவலாதிபேசுவதில் பேர்போன ஒருபெண் அர்ச். பிலிப்புநேரியாரிடம்வந்து தனது குற்றத்தைக் கூறினாள். அர்ச். பிலிப்புநேரியார் அவளை முழுவதும் திருத்தஎண்ணி அவளிடம் ஒரு கோழியைக்கொடுத்து, அதன் இறகுகளைப்பிரித்து அடிகாற்றில் வீசும்படிகூறினார். அவள் அதைச் செய்துவிட்டு வந்தபோது திரும்பப்போய் அவற்றை எடுத்துவரும்படி கூறினார். அவளோ "ஐயோ, சுவாமி! அவையெல்லாம் காற்றில் பறந்திருக்குமே. ஒன்றையாவது எடுக்க முடியாதே" என்றாள். அப்பொழுது அர்ச். பிலிப்புநேரியார் சொல்வார்: "பார்த்தாயா இப்படித்தான் நீபேசும் அவதூறு வார்த்தைகளை எவ்விதத்திலும் வாபஸ்பெறமுடியாது. இதனால் எத்தனையோபேர் எவ்வளவோ கஷ்டங்களுக்கு ஆளாகுவார்கள். "ஏழை அழுதகண்ணீர் கூரிய வாளொக்கும்" என்றதன்படி இவர்கள்விடும் ஒவ்வொரு கண்ணீர்த்துளிக்கும் நீபதில் சொல்ல வேண்டியிருக்கும் நடுத்தீர்வைநாளில்" என்றார். அப்பெண் அன்றுதொடங்கித் திருந்திநடந்தாள் என்று சொல்லவும் வேண்டுமோ?

## பூலோகத்தில் ஒருசொர்க்கம்:

எமது அயல்வீட்டுக்குப் புதிதாக வந்திருந்த மூன்றுசிறுமிகள் சைவசமயத்தவர்களானாலும் பண்டத்தரிப்பு "நொவிசியேற்" கன்னிகாமடத்தைப்பார்க்க வேண்டுமென்று ஆசித்தார்கள். ஆகவே அவர்களைச் சந்தோஷமாக அழைத்துக்கொண்டு போய்ச் சுற்றிக்காட்டினேன். முழுநேரமும் அக்கட்டட அழகையும், பூத்துக்குலுங்கும் நந்தாவனத்தையும் பார்த்துப்பார்த்து, "ஆ, என்ன அழகு" என்று அவர்களின் உதடுகள் முணுமுணுத்தன. உண்மையில் அழகே உறைவிடமாக இருக்கும் இப்பரிசுத்த கன்னிகாமடம் காணவருவோரைக் கவரும் ஒருசக்தி வாய்ந்ததாக இருக்கிறது. மோட்சலோகமோஎன வியப்புறும்படி நவகன்னிகைகள் சம்மனசுகள்போல் அத்தோட்டத்தினுள் வளையவரும் காட்சி மிகவும்மாண்புடையது: அப்பதிமட்டும் தானா அழகுடையது. ஏன் அங்கேவதியும் ஒவ்வொருகன்னிகையினதும் இதயங்களும் இறைவன் பாதத்தில் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வோர்வகை மலர்களன்றோ. இக்கவினுறு மடத்தைப் பார்த்தபின் வெளியே நோக்கினால் இவ்வுலகமே கல்லும் முள்ளும் நிறைந்து காட்சியளித்து, உலக வாழ்க்கையையே பிரதிபலிக்கின்றது அன்றோ! காடடர்ந்து, கவனிப்பாரற்றுக் கிடந்த இவ்விடத்தைத் திருக்குடும்ப கன்னியர் தம் அயராஉழைப்பால் அழகுறு நந்தாவனமாக்கியது போன்று நாமும் முயற்சியினால் பாவச்சேறு நிறைந்த நம்இதயங்களைப் புண்ணிய மலர்கள் நிறைந்த நந்தாவனமாக மாற்றிவிடலாம் அல்லவா?

---

சமையற்பகுதி:

## பயற்றம் பகோடாக் கறி

பயற்றம்பருப்பைச் சாதாரணமாக நாம் கொழுக்கட்டை, மோதகம் செய்வதற்கும் சாதாரண பருப்பைப்போல் கறிஆக்குவதற்கும் பயன்படுத்துகிறோம். பயறைப் பகோடாவாக்கி வற்றல்போல் நெடுநாட்கள்வைத்துக் கறியாக்குவதற்கு இதோ ஒருநவீன முறை:

பயற்றம்பருப்பைத் தூசிபோக்கி அரித்தெடுத்து நன்றாக நனையவையுங்கள். பின்னர் அதை நன்றாக அரைத்துப் பச்சைமிளகாய், வெண்காயம், செத்தல்மிளகாய் ஆதியவற்றை அரிந்து அதனுள்கொட்டிப் பிசைந்துவிடுங்கள்: இதை இடியப்பம் அவிப்பதுபோல் பானையின் வாயில் ஒரு சீலையைக்கட்டி அதனுள் ஊற்றி அவித்தெடுங்கள். நன்றாக இட்டலிபோல் வெந்தபின் எடுத்துக் கொட்டி, சிறுசிறு துண்டாக அரிந்தெடுத்துக் கொள்க. இத்துண்டங்களைத் தேங்காய் நெய்யில் நன்றாக முறுகுமட்டும் பொரித்துக் காகிதத்தில் கொட்டி எண்ணெய் போக்கி ஆறியபின் காற்றுப்புகாதபடி போத்தலில்கொட்டி மூடிவைத்துக்கொள்ளுங்கள்.

மழைகாலத்திலோ அல்லது வேறு காய்கறித் தட்டுப்பாடு ஏற்படும் பொழுதோ இந்தப் பகோடாவை எடுத்துப் பால்கறியாகவோ அன்றேல் வற்றல் குழம்புபோன்றோ செய்து சோற்றுடன் சாப்பிடலாம். பெருஞ்சீரகம்போன்று மசாலைப் பொருட்கள்சேர்த்துக் குழம்புக்கறி செய்தால் ஏறக்குறைய மாமிசம் போன்ற ருசியுடையதாக இருக்கும்.

> மௌனமே மங்கையருக்கு மேன்மையான மணி ஆரம்.
> ஆனால், அணிந்தால் அல்லவோ?

## 6-வது சின்னப்ப பாப்புவின் வாழ்க்கையில் ஒருநாள்

ஒருநாளில் 4முறைகளில் தமது இருகாரியதரிசிகளான குருமாருடன்சேர்ந்து செபித்துக்கொள்ளுகிறார். தனிமையாக ஒருமுறை செபமாலை ஓதுவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பேட்டிகள் அளித்தல், சொற்பொழிவாற்றல், பலவகைத் திருச்சடங்குகள் செய்தல், வத்திக்கானுக்கு அப்பால் குறிக்கப்பட்ட இடங்களுக்குச் செல்லுதல்—இவை போன்ற கருமங்களே பெரும்பாலும். அதன்பின் இரவில்நீண்ட நேரம் தனிமையாக வேலைசெய்கிறார்.

● காலை 7மணிக்குப்பூசை ஒப்புக்கொடுப்பார். அதன்பின் காரியதரிசிக குருவானர் ஒப்புக்கொடுக்கும்பூசையில் பங்குபெறுவார். பின் குருமாருடன்சேர்ந்து காலையில் குருமார்ஓதும் செபங்களைச் செபிப்பார்.

● காலை 8-45. காலைப்போசனம் அருந்தினதன்பின் நாட்பத்திரிகைகள் வாசிப்பார்.

● அதன்பின் பேட்டிகள்: காரியதரிசிக கருதினாலுக்கு அளிக்கும் பேட்டியுடன் இவை ஆரம்பமாகும். உத்தியோக முறையான பேட்டிகள் முடிந்ததன்பின் பிறபேட்டிகள். இவை யாவும் ஏற்கனவே ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. வியாழக்கிழமைகள் மாத்திரம் பேட்டிகள் இல்லை. இந்நாள்முழுவதும் மறுஅலுவல்களுக்கு ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

● மத்தியான போசனம் 1மணிக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பேட்டிகள் பெரும்பாலும் மத்தியானபோசன நேரத்தை பின்போட்டுவிடும்.

● அதன்பின் சிறிதுநேரஓய்வு.

● பின்னேரம் 3மணிக்குப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியன ஆராய்வாக வாசிப்பார்.

● அதன்பின்இரவு 8-30மணி வரையும் தனது மேசையில் உட்கார்ந்து அதிகமாக எழுத்துவேலைகளையும், மறுஅலுவல்களையும் கவனிப்பார்.

● சிற்சில நாட்களில் வத்திக்கான் சோலையில் உலாவச்செல்லுவார். அல்லது மோட்டோர் காரில் சிறிதுதூரம் சென்று திரும்புவார்.

● இரவு 8-30 மணிக்கு இராப்போசனத்தின் பின்பு செபமாலை நேரம். வானொலியில் உயர்தர சங்கீதம் கேட்பதில் பாப்பரசருக்கு விருப்பம்.

● அதன்பின் பழையபடி வேலை.

● இரவு 11மணிக்குக் காரியதரிசிக குருமாருடன் இராச்செபம்.

● பின்பு இரவு 1மணிவரையும் வாசித்துக்கொண்டும் மறுஅலுவல்களைக் கவனித்துக்கொண்டும் பாப்பரசர் தமதுநாளைச் செலவு செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## இந்தியவர்த்தகர்கள் வெளியேறினால் !

இந்தியவர்த்தகர்கள் பெருந்தொகையாக இலங்கையைவிட்டு வெளியேறுமிடத்து இலங்கையின் பிறநாட்டுச் செலவாணியிலே 15கோடிரூபாகுறையலாமெனக் கருதப்படுகிறது. இறக்குமதிவர்த்தகத்தை அரசாங்கம் எடுக்கவிருப்பதைமுன்னிட்டு இந்தியவர்த்தகர்கள் தற்சமயம் இலங்கையைவிட்டு வெளியேறிக்கொண் டிருக்கிறார்கள். இந்நாடுமுழுவதிலும் எண்ணூயிரம் இந்தியவர்த்தக ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இவைகளிலே நகைஈடுபிடிக்கும் கடைகள்இருபதாகும். இவைகளிலுள்ள செட்டிமார்களின் ஆஸ்திகள் மட்டும் பத்துக்கோடிரூபாவாம். தற்சமயம் இலங்கையைவிட்டு வெளியேறும் இந்தியர்கள் தங்கள்ஆஸ்தியிலே இரண்டரைஇலட்சம்ரூபா கொண்டு செல்ல அனுமதியுண்டு. மீதியை வருடந்தோறும் அவர்களுக்கு 25ஆயிரம் ரூபாவீதம் அரசாங்கம் அனுப்பிவைக்கும்.

## பாடசாலைகளில் வாக்கெடுப்பு

தமிழ்ப்பகுதிகளிலே பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சிங்களம் படிப்பிப்பதென்று அரசாங்கம் செய்துள்ளமுடிவைத் தமிழ்ப்பேசும்பெற்றோர் எதிர்க்கிறார்களா இல்லையாஎன்பதைப் பரிசோதித்தறிவதற்காக வடக்கிலும், கிழக்கிலுமுள்ள பாடசாலைஒவ்வொன்றிலும் வாக்கெடுப்பு நடைபெறவிருப்பதாய்த் தெரியவருகிறது. இந்தமுடிவைக்கல்விப்பகுதிச் சிரேஷ்டஅதிகாரிகள் நிறைவேற்றிவைப்பார்கள். பாடசாலைஒன்றில் வாக்கெடுப்பு நடைபெறும் தினமன்று பெற்றோர்மாத்திரம் உள்ளேசெல்ல அனுமதிக்கப்படுவார்களாம். சிங்களஆசிரியர்களைத் தமிழ்ப்பகுதிகளுக்குஅனுப்பக் கல்விமந்திரி முடிவுசெய்ததைத் தமிழரசுக் கட்சி ஆட்சேபித்ததின்பேரிலேயே இந்தவாக்கெடுப்பு நடத்தப்படவிருக்கிறது.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங் கோடு

ஆண்டிலே இரண்டாம்முறையாக நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு நிகழும்ஆடிமாதம் 31-ந்திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவிருக்கிறது. நீதியரசர் டக்றர் எச். டபிள்யு. தம்பையாஅவர்கள் விசாரணை நடத்தவிருக்கின்றார். இம்முறை 16வழக்குகள் விசாரணைக் கிருக்கின்றன. இவற்றில்13 கொலைவழக்குகளாகும்.

## பாடசாலைப் பாடபுத்தகங்கள்

பாடசாலைகளில் பாவிக்கப்படும் பாடபுத்தகங்களை அரசாங்கமே அச்சிட்டு வெளியிடவேண்டுமெனத் தீர்மானமாயிருக்கிறது. வருகிற1965-ம்ஆண்டு தைமாதமுதல் பாடசாலைகளில் பாவிக்கக்கூடியனவாய்ப் பின்வரும் தமிழ்ப் பாடபுத்தகங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 2-ம், 3-ம்தரக் கணிதபுத்தகங்கள். 6-ந்தரத் தமிழ்ப்பாஷை, இலக்கியபுத்தகங்கள். இவற்றுடன் 3-ந்தரத்துக்கு ஆங்கில பாடபுத்தகமும். அரசாங்கம்வெளியிடும் பாடபுத்தகங்கள் அனைத்தும் 1965-ம்ஆண்டு தைமாதமுதல் அரசாங்கபாடசாலைகளிலே குறித்தவகுப்புகளில் உபயோகிக்கப்படுமாம்.

## எம். பி. ஆலோசனை கூறுகின்றார்

சனப்பிரதிநிதிகள்சபையிலே சென்ற 15-ந்திகதியன்று கொத்மலை எம். பி. திரு. ஜே. ஏ. டி. வீரசேகரா பேசிய போது : "மொழிப்பிரச்சினையைச் சிநேகபான்மையானமுறையிலே அரசாங்கம் தீர்த்துக்கொண்டால்தான் இந்நாட்டில் தேசிய இனஉணர்ச்சி வளரும்; அதனால்சிங்களவர் மற்றச்சமூகத்தினரைச் சகோதரரெனக்கருதிப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொண்டு நாட்டை அரசியல், பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றமடையச்செய்வார்கள். மொழிப்பிரச்சினையை நாம்சுமுகமாகத் தீர்க்கமுடியும்; சிறுபான்மையினருக்குக் கொடுமைசெய்து இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாது; அவர்களின் குறைகளைத் தீர்த்து நாட்டில் சௌசன்யம் நிலவினாலன்றி எவ்விதஅபிவிருத்தியும் ஏற்படமுடியாது; இரத்தம்சிந்துவதால் யாதொருநன்மையும் ஏற்படப்போவதில்லை; இப்பிரச்சினையை அனுதாபத்தோடும், கருணையோடும் அணுகவேண்டும்; பேசிக்கொண்டு காலங்கழிக்க எமக்கு அவகாசமில்லை; உழைக்கவேண்டும்; நாம் ஒவ்வொருவரும் உழைத்தால்தான் நாடுமுன்னேறும்; எப்போதுமே விவாதத்தில் ஈடுபடுவதைக்கொண்டு நாட்டைஅபிவிருத்தி செய்யமுடியாது; சிங்களத்துக்கு அரசகருமமொழிஅந்தஸ்துக்கொடுப்பதோடு தமிழுக்கும் உரிய இடம் கொடுக்கவேண்டும்; தமிழ்மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ளவும், தமிழரசுக்கட்சியைச் செல்வாக்குஇழக்கச்செய்யவும் இதுதான் சிறந்தவழியாகும்" எனக் கூறலாயினர்.

## பிரதம நீதியரசர்

சர். அலன் றோஸ்அவர்களுக்குப்பின் பிரதமநீதியரசர்பதவியை 1955-ம் ஆண்டுஆனிமாதமுதல் வகித்திருந்தவரான திரு. எச். எச். பஸநாயக்கா, கியூ. சி. அவர்கள் தம்முடையபதவியிலிருந்து இளைப்பாறவிருக்கின்றார். இம்மாதம் 31-ந்திகதியன்றுகாலை 11 மணிக்குச் சகலநீதியரசர்களும், வழக்கறிஞர்முதலானோரும் ஒன்றுகூடி அவருக்குப்பிரியாவிடை அளிக்கவிருக்கின்றார்கள்.

## பொதுமக்கள் எழுதலாம்

பொதுமக்களில் எவராவது விரும்பினால் பொலிஸ்நிலையங்களிலுள்ள தகவல்புத்தகத்திலே தங்கள்புகார்களை எழுதலாம். பொலிஸ்படை ஆரம்பமானபின் இந்தச்சலுகை அருளப்பட்டிருப்பது இதுவேமுதல்முறையாகும். புகார்செய்யும்போது அதைப் பொலிஸ் உத்தியோகஸ்தர் சரிவரஎழுதமுடியாவிடில் பொதுமக்கள் தங்களுக்குத் தெரிந்தமொழியில் எழுதலாம்.

## பட்டதாரிகளான ஆசிரியர்கள்

பட்டதாரிகளுக்கான 269ஆசிரிய பதவிகள் காலியாயிருக்கின்றன. அவைகளை நிரப்புவதற்கென இதுவரை எடுத்துக்கொண்டமுயற்சிகள் பலனளிக்கவில்லை. இதற்கு அடிப்படையான தேவை, மனுச்செய்பவர் இலங்கையின் எந்தப்பாகத்திலும் கடமையாற்ற விருப்பமுடையவராயும், கலைப்பாடங்கள் அல்லது விஞ்ஞானபாடங்களைச் சிங்களத்தில் படிப்பிக்கக்கூடிய தகமையுடையவராயும் இருக்கவேண்டும்.

## அடுத்தவருடத்து உணவுமான்யம்

புதிய வரவு-செலவுத் திட்டத்திலே உணவுமான்யம் 48கோடியே 36இலட்சத்து 60ஆயிரம்ரூபாவாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொகை இப்போதைய நிதிவருட உணவுமான்யத்திலும் நாலரைக்கோடி ரூபாவரை கூடுதலானது. புதியநிதிவருடத்திலே பங்கீட்டரிசி உணவுமான்யம் 28கோடியே 2இலட்சத்து 60ஆயிரம்ரூபா. நெல்உற்பத்தியாளர் மான்யம் 18கோடியே 92இலட்சத்து 20ஆயிரம்ரூபா வெண்காயஉற்பத்தியாளர் மான்யம் 25இலட்சம்ரூபா. கோதுமைமா[illegible] மான்யம் [illegible] 15இலட்சத்து 50ஆயிரம்ரூபா. வரவு-செலவுத்திட்டத்தில் கோதுமைப்பங்கீட்டு மான்யம் இடம்பெறுவது இதுவேமுதன்முறையாகும்.

## தீவிரதடுப்புவேலைகள்

பாதுகாப்பு-வெளிநாட்டு மந்திரிகாரியாலயம் கள்ளக்குடியேற்றத்தைத் தடுக்கும்நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக்க ஆயத்தப்படுகின்றது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வரை கடற்கரைநெடுக அதிகமானபடைகளைக் காவலில்அமர்த்தவும், பலம்வாய்ந்த ஆறு இயந்திரப்படகுகளை இடைவிடாது காவலில்ஈடுபடுத்தவும் அது தீர்மானித்துள்ளது.

## மூன்று பாதுகாப்புகள்

சுதந்திரமான நீதிச்சேவை, சுதந்திரமானபத்திரிகை, சுதந்திரமும் பயமற்றதுமான வழக்கறிஞர்தொழில் ஆகியமூன்றுமே ஜனநாயகசமூகத்தின் மிகமுக்கியமான பாதுகாப்புகளாகுமென்று பிரதமநீதியரசர் திரு. எச். எச். பஸநாயக்காஅவர்கள் இலங்கை மாதர்வழக்கறிஞர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற ஒருகருத்தரங்கிலே உரையாற்றியபோது கூறியிருக்கின்றார்.

● தென்னிந்தியாவிலே உதகமண்டல மேற்றிராசனமானது காலஞ்சென்ற இந்தியபிரதமர் ஜவஹர்லால் நேருவின் ஞாபகார்த்தமாக ஐம்பது படுக்கைகள்கொண்ட ஓர்ஆஸ்பத்திரியைக் கட்டவிருக்கின்றது. இற்றைக்கு எட்டுவருடங்களின்முன் ஸ்தாபிக்கப்பட்ட இந்தமேற்றிராசனத்தின் முதலாவதுஆஸ்பத்திரி இதுவாகும். இது நஞ்சனுத் எனுமிடத்திலே எட்டுஏக்கர் விஸ்தீரணமான ஓர் இடத்திலே கட்டப்படவிருக்கிறது.

● வத்திக்கானிலே பாப்பரசர் அளிக்கும்சாதாரண பொதுசன பேட்டிகளுக்கென்று பதினாயிரமுதல் பன்னீராயிரம்பேரை அடக்கக்கூடிய சபாமண்டபமொன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இது வத்திக்கான்நகர் இராச்சியத்திலே திருக்கந்தோரின் தலைமைஸ்தானத்தைஅடுத்து சம்பேதுருவானவர் மகாதேவாலயத்தின் இடதுபுறமாக அமைக்கப்படும்.

● றோமைநகரிலுள்ள "றோமன் போற" முக்குச் சமீபமாயுள்ள விருத்தாப்பியர்களின் விடுதியொன்றுக்குத் தாம் திருமுடிசூடிய முதலாம்ஆண்டு நிறைவுதினமன்று சின்னப்பபாப்பரசர் நினையாப்பிரகாரமாய் விஜயஞ்செய்து அதிலிருந்த ஒவ்வொருவருடனும் சம்பாஷித்து, போசனசாலையிலே அவர்களுக்குச் சூப்பும், மக்றோனிமுதலாம் உணவுவகைகளும் பரிமாறலாயினர்.

"நீ பிறரால் அறியப்படாதிருப்பதையும் நீ யொன்றுமில்லாமை யென்று பிறரால் மதிக்கப் படுவதையும் நேசி"

விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்



அதிக லாபத்தைப் பெறுங்கள்!
இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்
விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்
ஓட்டோஸ் லிமிட்டெட்,
தந்தி : "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன் : 496.
கிளை
தந்தி : "AUTOS" வவுனியா. டெலிபோன் : 577.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஆடிமாதம் 25-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org